

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோத்தகிரியில் நடைபெற்ற திமுக கொடியேற்று விழாவில் மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையேற்று பேசினார். உடன் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், கே.இ.பிரகாஷ் எம்.பி., தென்றல் செல்வராஜ் உட்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் வடக்கு மணப்பாக்கம் 157வது வார்டு முன்னாள் மாவட்டப் பிரதிநிதி எம். ஜெயபால் – அனிதா ஜெயபால் ஆகியோரின் இல்லத் திருமண விழாவில் மாவட்டச் செயலாளர் –அமைச்சர் தா.மோ. அன்பரசன், அமைச்சர் கோ.வி.செழியன் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். இதில் படப்பை ஆ. மனோகரன், பாலவாக்கம் விஸ்வநாதன், ஏ.வந்தேமாதரம், சரஸ்வதி, மனோகரன், உமா மகேஸ்வரி வந்தே மாதரம், சுலைமான் சையத், பா. சுதாகர், ஏ. மணி, பெ.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஃபெஞ்சல் புயல்: செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - பாதிப்புகளை நேரில் பார்வையிட்டார்!

## நிவாரண முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு ஆறுதல் கூறி – நிவாரணப் பொருட்கள் வழங்கினார்!

சென்னை,டிச.2-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்சல் புயல் மழையால் பாதிக்கப்பட்ட செங்கல்பட்டு, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பாதிப்புகளை நேற்று (1.12.2024) நேரில் பார்வையிட்டு, நிவாரண முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு நிவாரண உதவிப்பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:

முதலாவதாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் முத்தமிழ் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 65 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 120 பொதுமக்களுக்கு அரிசி, பிஸ்கட், பாய், போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வட்டம் 108 கொடப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள கானத்தூர் கொடப்பட்டினம் கிராமத்தை சேர்ந்த இருளர் இன மக்களுக்கு அரிசி, பிஸ்கட், பாய் போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக மரக்காணம் அரசு மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரண தொகுப்பினை வழங்கினார்.

மேலும், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சி வார்டு எண் 26, நாகலாபுரம் பகுதியில் ஃபெஞ்சல் புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். இந்த பகுதியில் சீரமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், ஃபெஞ்சல் புயல் மழையினால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சேவியர் காலனி பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் ஃபெஞ்சல் புயல் மழையினால் பாதிக்கப்பட்ட சேவியர் காலனி பகுதியைச் சேர்ந்த 500 பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

மேலும் விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் கோட்டகுப்பம் ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள ஜாமிஆ மஸ்ஜித் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 250 பொதுமக்களுக்கு நிவாரண பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

### பேட்டி!

விழுப்புரம் பேருந்து நிலைய ஆய்வின்போது செய்தியாளர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது:

மழை தொடர்ந்து பெய்து வருகின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நானும் அமைச்சர் பெருமக்களும் வந்துள்ளோம். இந்த பேருந்து நிலைய பகுதியில் 60 செ.மீட்டருக்கும் அதிகமான மழை பெய்து வருகின்றது. இன்னும் மழை நிற்க வில்லை. இருந்தபோதும் பம்புகள் மூலமாக தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது. கூடுதலாக பம்புகள் அமைத்து நீரை வெளியேற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிரந்தர தீர்வாக பேருந்து நிலயைத்தின் தரையின் உயரத்தை அதிகரிக்க முன்மொழிவு கொடுத்துள்ளார்கள். இதனைத்தொடர்ந்து கடலூர் மாவட்டத்திற்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் ஆய்வு செய்ய செல்லவுள்ளோம்.

**கேள்வி:** நேற்று பெய்த மழையில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதே....

**பதில்:** மழை நின்றபிறகு 3 நாட்களுக்கு பிறகு கள ஆய்வு செய்து இழப்பீடு கண்டிப்பாக கொடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம் கடலூர் நகராட்சி புருஷோத்தமன் நகரில் ஃபெஞ்சல் புயல் மழை பாதிப்பு குறித்தும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் கடலூர் மாவட்டம் கடலூர் நகராட்சி சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் பொதுமக்களுக்கு நிவாரணப்பொருட்கள் அடங்கிய தொகுப்பினையும், இரவு உணவினையும் வழங்கினார்.

இந்த ஆய்வுகளின் போது, வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு கா. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் அ.சிவா, சபா.இராஜேந்திரன், எஸ்.எஸ். பாலாஜி, மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, சிறப்பு கண்காணிப்பு அலுவலர்கள் ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அரசு முதன்மைச் செயலாளர்/போக்குவரத்துத்துறை ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, கடலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் /தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குனர் ராமன் செங்கல்பட்டு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆ.ரா. ராகுல் நாத் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, (விழுப்புரம்), சிபி ஆதித்யா செந்தில்குமார் (கடலூர்), ச.அருண்ராஜ் (செங்கல்பட்டு) உள்பட அரசு அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# கோத்தகிரி ஒன்றிய கழகம் சார்பில் கழக கொடியேற்று விழா!

## ஆ.இராசா எம்.பி. கொடியேற்றி வைத்தார்!

உதகை, டிச.02-

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கோத்தகிரி ஒன்றிய கழகம் சார்பில், டானிங்டன் பகுதியில் கழக கொடியேற்று விழா மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது. கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

கழக துணை பொது செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா 47 அடி உயர கம்பத்தில் கழக கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கல்வெட்டினை திறந்து வைத்தார்.

மாநில இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி., தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரது திருவுருவப் படங்களை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## ஃபெஞ்சல் புயல்: எழும்பூர் தொகுதி

# 99வது வார்டில் 4000 பேருக்கு உணவு!

## மாநகராட்சி சார்பில் – பரிதி இளம் சுருதி எம்.சி. ஏற்பாடு!

சென்னை, டிச.02

முதலமைச்சர் - தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்படி அமைச்சர் - சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதலின்படி, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி வார்டு 99 ஃபெஞ்சல் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட ஓட்டேரி திடீர் நகர், சாலை மாநகர், பொன்னன் தெரு, கங்காதீஸ்வரர் கோவில் தெரு, புரசைவாக்கம் காவலர் குடியிருப்பு, டாக்டர் அழகப்பா நெடுஞ்சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை, நேரு பூங்கா, சாஸ்திரி நகர், புல்லாபுரம், புதிய பூபதி நகர், ஓசான்குளம், ஆகிய பகுதிகளில் தேங்கியிருந்த மழை நீரை தி.மு.க அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட 4000 பொது மக்களுக்கு மாநகராட்சி சார்பில் உணவு ஏற்பாடு செய்து அனைவருக்கும் வழங்கப்பட்டது.

ஃபெஞ்சல் புயலால் பெரும் பாதிப்படைந்த ஓசான்குளம் பகுதியில் வசிக்கும் குழந்தைகளுக்கு பால் பவுடர் வழங்கி பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை மற்றும் சேவை துறை சார்பில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமை துவங்கி வைத்து பொதுமக்களுக்கு பிரட் மற்றும் பிஸ்கட் வழங்கினார்.

## வட்டச் செயலாளர் எஸ்.முருகவேல் தலைமையில்

# வேளச்சேரி 176-வது வட்டத்தில் 500 பேருக்கு அரிசி பை - உணவு!

## அரிமா சு.சேகர் வழங்கினார்!

சென்னை, டிச. 1-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா வேளச்சேரி மேற்குப் பகுதி 176 -வது வட்டத்தில் வட்டச் செயலாளர் எஸ். முருகவேல் தலைமையில் நடைபெற்றது.

இதில் பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர், கழக கொடியேற்றி, 500 5 கிலோ கொண்ட அரிசி பை , உணவு வழங்கினர். வேளச்சேரியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு 500 நபர்களுக்கு நல திட்ட உதவிகளை வட்ட செயலாளர் முருகவேல் கட்சி நிர்வாகிகள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகின்றனர் அதன் ஒரு பகுதியாக சென்னை வேளச்சேரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 176 வது வட்ட செயலாளர் எஸ்.முருகவேல் தலைமையில் 500 நபர்களுக்கு 5 கிலோ கொண்ட அரிசி பை, உணவு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது இந்த நிகழ்ச்சிக்கு வேளச்சேரி மேற்கு பகுதி செயலாளர் அரிமா சு.சேகர் 500 கும் மேற்பட்ட நபர்களுக்கு அரிசி பை மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார் .



ஃபெஞ்சல் புயல் காரணமாக கனமழை பெய்து வரும் நிலையில் ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட பரணிபுத்தூர் ஜோதி நகரில் சாலைகளில் மழைநீர் தேங்குவதாக வந்த புகாரை அடுத்து அப்பகுதிக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று பார்வையிட்டு மழைநீரை வெளியேற்றும் பணியை துரிதப்படுத்தினார். அருகில் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் காட்டுப்பாக்கம் ஊராட்சியில் உணவு வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார் .உடன் நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நிர்வாகிகள் வி. குமார், ஏ.ஜனார்த்தனன், எஸ்.புகழேந்தி, கே.ஆர்.பாஸ்கர், வயலை பிரபாகரன், வி.பி.பிரகாஷ், ஏ.ஜி.ரவி, டி.குமரேசன், என்.சண்முகம், வி.தணிகாசலம், பேட்டை டி.திருமலை ராஜ், கே.ஜி.ஆர்.எஸ். ஸ்டாலின், கேசவன், சுமதிஅத்திகிரி, ஸ்ரீதர், முரளி, மனோகர், பவன்குமார், தமிழ்ச்செல்வி, அன்னம், எம். ரவிக்குமார், கலைமதி, பி.ஜி.கிருஷ்ணன், பச்சையப்பன், கே.ஜி. பாலா , ரமேஷ் சுப்பையா , சுபாஷ் பாபு , செந்தமிழ்அரசு அரிகிருஷ்ணன் , ஐ.சி.எப்.மதன் , பந்தன், ஜி.டி.அருண் குமார், உள்பட பலர் உள்ளனர்

## 'திராவிட இயக்க வரலாறு' புத்தகம் - கா.வீ.தியாகராஜன் வழங்கினார்!

# சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. – எஸ்.வி.ரவிச்சந்திரன் பங்கேற்பு!

சென்னை, டிச.2 -

துணை முதல்வர் பிறந்தநாள் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் நல்வழிகாட்டுதலுடன், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி, சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதிக் கழகச் செயலாளர் 14வது மண்டலக் குழுத் தலைவர் பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன் தலைமையில் பெருங்குடி பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா கலந்துகொண்டு இளைஞர் எழுச்சி நாள் மற்றும் இல்லம் தோறும் உறுப்பினர் சேர்க்கை மற்றும் பல்வேறு கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனைளை வழங்கினார் .

இக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து இளைஞர் அணி நிர்வாகிகளுக்கும் சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக மாவட்ட துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் தமது சொந்த செலவில், திராவிட இயக்க வரலாறு புத்தகத்தை நினைவுப் பரிசாக வழங்கினார்.

இக்கூட்டத்தில் வட்ட செயலாளர்கள் ஜெய், தேவராஜ், சௌந்தர், ஆறுமுகம், சுரேஷ், ரஞ்சித், பகுதி அமைப்பாளர் ம.ரீகாந்த், துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டத்தில் 27.11.2024 அன்று அமைச்சர் மா. சுப்பிரமணியன், பகுதிச் செயலாளர் – மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் ஆகியோர் வே.முருகன் முன்னிலையில் உணவு வழங்கினர். இதில் பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், முன்னணியினர், அணகிளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நேதாஜி யு.கணேசன் ஏற்பாடு! எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை!

# 38வது வட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! 1000 பொதுமக்களுக்கு சிற்றுண்டி !

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. வழங்கினர் !

சென்னை டிச.2:

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டக் கழக சார்பாக வட்ட கழக செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சி ஏழை எளியோர்க்கு 1000 பொதுமக்களுக்கு பிறந்தநாள் கேக் வெட்டி, காலை சிற்றுண்டி வழக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், ஆகியோர் வழங்கினர். பகுதி கழக செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் ஏ.டி.மணி, டி.வெங்கடேசன், லோகநாதன், கோவிந்தராஜ், தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ஏ.மணிமேகலை, வட்ட கழக செயலாளர்கள் எஸ்.எல்.சுந்தர், ஆர்.ஏ.எம்.சசிகுமார், கி.தேவன், ஜி.ஏழுமலை, 38வது வட்டக் கழக நிர்வாகிகள் எம். விமலா, கே.சி. ராஜா, ஏ.முருகேசன், எஸ்.ராஜா, எம்.சரஸ்வதி, வி.எஸ். ரவி, எல். சந்துரு, ஏ.ஆனந்தன், எஸ்.சக்திவேல், ரஜாக், மீஞ்சூர் முகுந்தன், கே.ஜானகிராமன், ஜான் கென்னடி, மோகன், தயாளன், பூபதிசாதி, சி.மணிகண்டன், மைமூன் சாதிக், அருணாச்சலம், செந்தில்குமார், முகமதுஎய்யா, பாப்பம்மாள், தமிழ்ச்செல்வன், ஷாலினி, மாசனாதுரை, ஜலால், எம்.அரிகிருஷ்ணன், எஸ்.கமருதீன், துரை, வேலு, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

எஸ்.கிருஷ்ணன் நன்றி கூறினார்.



மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்தில் உள்ள தொழுப்பேடு அரசினர் மேல்நிலைப் பள்ளியில் புயல் மழையால் பாதிக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட இருளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு அரிசி, போர்வை, உணவு காய்கறி, பிஸ்கட் உள்ளிட்ட உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் பொன்மலர் சிவக்குமார் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.இதில் சிறப்பு அழைப்பாளராக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கினார். அருகில் ஒன்றிய குழு பெருந்தலைவர் கண்ணன், மாவட்ட துணை செயலாளர் கோகுலக்கண்ணன், கவுன்சிலர்கள் பொன் மலர், சாரதி ஆகியோர் உள்ளனர்.